பாடியே திரியாதே மூன்றெழுத்தைப்
பருகுதே சிதறுதே பணிந்துகொள்ளே. 345

கொள்ளடா மூன்றெழுத்தின் பயனைத்தானுங்
குவலயத்தி லொருவருக்குந் தெரியாதப்பா
அல்லடா மகாரமொடு நகாரத்துக்கும்
அப்பனே யுயிராச்சு சிகாரங்கண்டாய்
வல்லடா பெரியோர்க ளறிந்துகொண்டு
மாருடல் மூன்றெழுத்தை மருவியோதி
வில்லடா விற்பூட்டி யாறிறைற்போல்
விசைகொண்டு மூன்றெழுத்தை விருப்பிப்பாரே. ()

பாரப்பா மசிதசியென் றெழுத்தைத்தானும்
பராபரந்தான் வந்தாலு மசிதேசொல்ல
ஆரப்பா லோகத்தோர்க் கிப்தாயாலும்
ஆகாய வெள்ளிடிபு மதிரவீழும்
நேரப்பா வாலைவிந்தை யென்றுபேரு
நிஷ்டையொடு சமாதியென்று மிதற்குப்பேரு
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
விந்துவட்டந் தனையறிந்து விரித்துக்காணே. 347

காணடா பச்சைநிறம் விழியிலுள்ளே
கலந்தெழுந்த சதாசிவனே கணைசறுச்சு

தானடா வொளியாலே பிரபைவீசிச்
சகலருக்கு மாதார மாகிப்போச்சு
கோனடா குலதெய்வத் தருளினாலே
கொடியாவிப் பிரபையெங்கே விழிக்குள்ளாச்சு
ஊனடா வுயிராச்சு வுலகமாச்சு
ஓம்நமசி வாயமென்ற தறுவாய்ப்பாரே. 348

பாரடா வெங்கையது கொடிதேனைமந்தா
பாவையர்க ளாசையிலே பாய்நதேயேறும்
ஆரடா வெங்கைதனைச் சட்டுமைந்தா
அறிவான ம்மதி லப்பாலேறி
ஊரடா பஞ்சசத்தி தியானங்கண்டே
யொன்றென்ற பொருளொன்றே யுருகிவாடக
கோனடா மனமுருகிக் குவிநதையாறு
குண்டலியாஞ் சத்தியுட குறிப்பிதாச்சே. 349

ஆச்சடா குண்டலியாஞ் சத்தியென்று
லப்பனே மனோன்மணியென் றவட்குப்பேரு
வாச்சடா மனமல்லோ மணியதாகும்
வச்சிரா யுதமென்றே யிதற்குப்பேரு
காச்சடா பிசகாம லுன்னோவொன்றும்
கல்மாறி யிடசாரி யாட்டுலைக்கும்
மூச்சடா பதுங்கியினிக் குமிழியாயும்
மூச்சடாமய பேரின்ப முறையிதாமே. 350

ஆமென்று சொன்னவிடம் அடங்கிப்பாயும்
அப்பனே புற்றரவு மதிசொரும்
ஓமென்று சொல்லிடவே விடங்கள்யாவும்
உன்னிடத்தில் தீனைக்கடி யுதவிசெய்யும்
நாமென்ற சொல்லுற்றோன் நமனைவெல்லும்
நாதாந்தப் பூரணத்தின் நடுவேகூட்டும்
காமென்ற காமனுந்தன் பொசிங்கிப்போவான்
காயமே பலங்கொடுக்குங் காட்சிபாரே. 351

பாரப்பா வின்னமென்று பகரக்கேளு
பார்தனிலே பொருளுருக்குத் தெரியாதப்பா
ஆரப்பா விந்துவென்றுஞ் சிவன்றென்றும்
ஆகாச மானகுரு நாதனென்றும்

நேரப்பா விதிப்படியே யனேகம்பேராம்
நிலையான சிவனார்தன் தேம்புதன்னை
வேரப்பா வேறெடுத்துப் பலந்தான் நூறு
வித்தகனே யுலரவைத்து எடுத்துக்கொள்ளே. 352

கொள்ளடா வுலரவைத்த வேருதன்னைக்
கூறுகிறேன் மரியென்றே சாபந்தீர்த்து
அல்லடா நறுக்கியதைப் பாண்டத்திட்டு
அப்பனே சலந்தானும் படிதான் நூறு
வல்லடா வல்லவ நீ பாகவென்றால்
மைந்தனே வேருதனைச் சலந்திற்றூக்கிச்
சொல்லடா ஐயென்றுங் கிலியென்றேதிச்
சோடசோப சாரமுடன் பூசைபண்ணே. 353

பண்ணுவது பூசையிகி யறிந்துபோற்றிப்
பாலகனே யொருவிறகால் வற்றககாச்சிச்
கண்ணுடனக் கண்ணறிந்து விண்ணைப்பார்த்துக்
கலக்கெழுந்த சலந்தானும் படிரண்டானால்
மண்ணுலகி லொருவருக்கும் காட்டாமற்றான்
மைந்தனே கஷாயமதை யிறுத்துவாங்கி
உணணுவது ஓரெழுந நால் மண்டலமுன்னி
யொடுங்கியே நிலைதனத்தா னுற்றுப்பாரே. 354

பாரப்பா பத்துபலம் பரங்கிப்பட்டை
பச்சடா கொடுவலிவேர் பலந்தான்பத்து
ஆமப்பா பிரமியின்வேர் பலந்தான்பத்து
அப்பனே மூன்றையுந் தானிறுத்துவாங்கித்
தேரப்பா இடித்திடுவாய் தூளாகத்
தேவிபஞ்ச சத்தியவள் தியானங்கொண்டு
பரப்பா பாண்டத்திற் றூள்தன்னை
யென்மக்காள் போட்டிலே சாபந்தீரே. 355

திராட்சாபமெல்லாம் நிவர்த்திசெய்து
தெளிவான நாளைசூழ்ந் தைலம்வாங்கி
வேரடா வெருட்பிலுக்காய்த் திரிதிடாமல்
விருண மிளகுபலங் காலதாக
நேரடா திப்பிலியும் பலங்காலாக
திருத்திடுவாய் சுக்குதாவும் பலங்காலாகச்

சேரடா காந்தமுந் தான் விராகன்ரண்டு
சேர்த்திடுவாய் ரசந்தானும் விராகன்ரண்டே. 356

விராகனிடை யிப்படியே நிறுத்துவாங்கு
வீருண வஸ்துவிட்டுச் சாமம் நான்கு
மாறுபடி யரைத்துரைத்து வழித்துக்கொண்டு
மைந்தனே முன்சொன்ன மைகலந்தன்னில்
விராகக்கால் பாகமுன்னித் தியானம் பண்ணி
விட்டரட்டி மந்தரங்களெல்லாங் கலக்கிக்கொண்டு
தராதரமாய் முன்சொன்ன கஷாயந்தன்னிற்
சுருக்கிடுவாய் மைலமெல்லா மொன்றாய்த்தானே.()

தானென்ற ஆவின்நெய் படிரண்டாகத்
தாக்கடா கஷாயமது தன்னில்விட்டுக்
கோனென்ற குருவருளால் கிலியென்றேதிக்
கூட்டடா லட்சமுரு குவ்வாய்த்தாக
வானென்ற மெழுகுபதமாகக் காய்ச்சி
வாய்போசச் செகிறதிடுவாய் மைந்தநீயும்
தேனென்ற நெய்யயுந்தான் பக்குவம்பண்ணிச்
சீவன்முத்தக் குருவருள் செப்பக்கேளே. 358

கேளடா தேகமந்தான் வலுத்துப் போச்சு
கிருமிதுபோலவே யாகாம செல்வார்
ஆளடா ரோகமெல்லா மழிந்துபோகும்
அப்பனே ஜனனிசாரட்டேனே நீயும்
வாழடா யீளையொடு காசந்தீரும்
வக்கசீனைகள் பருத்திடும் பாறிப்போகும்
நாளடா பெருப்பாடு உடனே தீரும்
தாய்நீர்ச் சுருக்குத் தீர் முறிவுபோமே. 359

போமடா குஷ்டமெல்லாம் ஓடிப்போகும்
பொல்லாத சூனியமும் பாசுக்கியம்போகும்
ஆமடா விஷமெல்லா மகன்றுபோகும்
அடங்காத சூதகத்தின் திரட்சிபோகும்
நாமடா அரையாப்பு வெட்டைதீரும்
நடுக்கியகோர வாதமெலாம் நாசமாகும்
வாயடா மண்டலந்தான் கொண்டபோக்கு
மாருத வயிறெட்ட மாயப்பாரே. 360

பாரப்பா இம்மருந்தை யுண்ணும்போதும்
பாவையர்க ளாசையுந்தா னாகாதப்பா
ஆரப்பா ஆசைவைத்தே யுண்டானால்
அவன்தேக மட்சணத்தி லழிந்துபோகும்
நேரப்பா நேரமொன்று விராகன்ரெண்டு
நிச்சயமாய் நெய்யையுந்தா னிறுத்திக்கொண்டு
வேரப்பா வெளியேதான் சொல்லிடாமல்
வினைதீர மருந்தையுந்தான் விரும்பிக்கொள்ளே. ()

கொள்ளடா இக்கிருதம் போலேமைந்தா
குவலயத்திற் சித்தர்கடான் சொல்லார்சொல்லார்
அல்லடா வுமையாளுந் தாங்கேட்டே
அப்பனே கிருதமெல்லாம் வெளியாய்ச்சொன்னே
வல்லடா வல்லடியாய்ச் சித்தர்கூடி (ன்
வருந்தியெனைப் பணிந்தவர்கள் குருவென்றார்கள்
செல்லடா செல்லமென்றுஞ் சிவனென்றுஞ்
செப்பிறோ ரோமென்று மாமென்றேனே. 362

ஆமென்ற சொற்கேட்டுச் சித்தர்கூடி
யாதிகுரு நீயென்று அருளைப்போற்றி
ஓமென்று குண்டலியைப் பார்த்தேயாடி
யுனைப்போலே சித்தர்கா ளில்லையென்றார்
நாமென்று அவர்களுக்குச் சொன்னபேச்சு
நாதாந்த மவுனமதை யவர்க்கேயீந்தேன்
ஓமென்று மாமென்று மெழுத்தைக்காட்டி
உயர்வான வடகிரியி லிருமென்றேனே. 363

இருமென்று பேச்சாலே ஆ-உ-என்று
வகிறோர் குறைஞ்சித்த ரனேகங்கோடி
திருமந்த்ர மூலமெல்லாம் வெளியாய்க்காட்டிச்
செகத்திலுள்ள மனிதர்களைச் சித்தராக்கி
குருமந்த்ர மறியாமற் சாவாரென்று
குணம்வந்து மனதிரங்கிக் குருபோற்சொன்னேன்
மருமந்த்ர மேதுக்கு மக்காள்மக்காள்
மகாரமல்லோ தீபவொளி மார்க்கம்பாரே. 364

பாரப்பா பரமசிவ னிம்மூலத்தாற்
பரையினிடம் வாழ்வதற்குப் பாக்யம்பெற்றார்

ஆரப்பா விம்மூல மறிந்துநானும்
அவர்தனக்கு பெட்டாக வஸ்துவானேன்
நேரப்பா வஸ்துசட்டாட் சாமுயமாகி
நீங்காத சிற்றறிபெற் றரியுமானேன்
காரப்பா வுந்திநிலை கண்டால்மோட்சம்
காணாட்டாற் கழுதையென்று காட்டுறேனே. 365

காட்டுகிறேன் கழுதையென்று சொன்னால்மோட்சங்
கள்ளனென்று சொன்னாலுங் கபடமார்க்கம்
நாட்டுகிறே னியான்றனும் வெளியாய்ச்சொன்னேன்
நான்றனுஞ் சொல்லாட்டாற பாவம்பாவம்
வீட்டிலே யிருந்து நீ தீபம்வைத்து
வேடிக்கை பார்த்திடுவாய் சிலம்பினோசை
காட்டிலே திரிந்தாக்கால் வருவதேது
கபடற்ற சித்தனென்றுற் கண்டுகொள்ளே. 366

கொள்ளாத பசுவுக்குப் பாலங்கேது
குருடான கண்ணுக்கு வெளிச்சமேது
சொல்லாத பேச்சுக்குக் கேள்வியேது
சோரஞ்செய் மங்கையர்க்கு வாழ்வுமேது
கல்லாத வீணருக்குக் கல்வியேது
காணாத பேர்களுக்குக் காட்சியேது
விள்ளாத சீடனுக்குக் குருவுமேது
வேடிக்கையாய்த் திரிந்தால் விழலாம்பாரே. 367

பாரப்பா மவுனமுண்டு பாராவிட்டாற்
பழமரமே யிடிவிழுந்து பட்டுப்போவான்
ஆரப்பா மவுனத்தா லறிவைக்கண்டு
ஆட்டமென்ற ஆட்டமெல்லா மடங்கத்தள்ளிச்
சேரப்பா பஞ்சசத்தி தியானத்தாலே
செகத்தோர்களடி பணிந்து தெண்டஞ்செய்வார்
பாரப்பா நீமேலா ராய்ந்துபார்த்து
மனதொருமை யாகவுந்தான் மனதிற்றங்கே. 368

தங்கடா செடிபூடு விருட்சமெல்லாம்
சப்புசந்தா பரவெளிபோ லல்லால்வேறு
அங்காடி யுயிரெல்லாஞ் சிவமதாகும்
அடங்காத மலைகாடுஞ் சிவமதாகும்

தங்கடா இப்படியே சிவமதாக்கிச்
சகலருக்கு முயிர்க்குயிராய்த் தானேதானாய்ப்
பங்கடா பலவிதமாய் மாயைதோன்றிப்
பராபரையு மொன்றாகி யிருந்தவாறே. 369

வாரான தேவிகருக் கண்தான்பத்து
வளமான சிவனுக்குப் பதினொன்றாகும்
காரான கண்ணையுந்தா னறிந்தாலமுத்தி
தவறினா லுனைவாரித் தகர்த்துப்போடும்
கூரான இடகலையே காலனாகும்
குறிப்பான பிங்கலையே பாசமாசசு
பேரான சுழிமுனையே முத்தியாகும்
பேசாத குலதெய்வந் தன்னைப்பாரே. 370

பாரப்பா வெங்கெங்கு மோடினாலும்
பலபலவாய் மந்திரங்கள் படித்திட்டாலும்
ஆரப்பா மவுனமென்ற ஆதிபீடம்
அதினாலே சகலசித்து மாட்டி வைக்கும்
நேரப்பா மற்றதினா லாவதென்ன
நிலைகண்ட பெரியோர்கள் நீஞ்சுவார்கள்
ஊரப்பா கோடியிலே யொருவனுண்டு
உற்றுணர்ந்த பெரியோர்க ளுண்மைதானே. 371

உண்மையென்றால் மனதுண்மை யிருக்கவேணும்
உயிர்தோறும் நாமென்று நினைக்கவேணும்
தன்மையிலே யதிகமாய்த் தன்மைவேணும்
தவறாத தாரணையிற் சாரவேணும்
அம்மையெனு மாதாளைப் பணியவேணும்
அஷ்டாங்க யெக்கியங்கள் செய்யவேணும்
ஜன்மமென்ன பாவத்தா லெடுத்தஜன்மச்
சடமழியா திருந்தவர்க்கு முத்தியாமே. 372

முத்தியுமாய் மூலபொருளாய் மூலைந்தலிங்கம்
மூலைந்ததிலே யாவுடைய மானலிங்கம்
சத்தியமாய்ச் சிலையாக வாழ்ந்தலிங்கம்
சாமாறிக கால்மாறி யாடும்லிங்கம்
புத்தியிலே பேதையொன்றும் பொருந்தலிங்கம்
புலவருக்குத் துணையாகப் புகுந்தலிங்கம்

எத்திசையு முயிர்தோறு மிருந்தலிங்கம்
ஏகாந்த லிங்கமென்று மிச்சம்பாரே. 373

பாரப்பா லிங்கமென்றும் பரந்தானென்றும்
பஞ்சசக்தி யாளுடைய பீடமென்றும்
ஆரப்பா வாசிமனோ லயந்தானென்றும்
அடுக்கடுக்கா யங்கங்கே செனித்ததென்றும்
நேரப்பா மூலமென்றும் பீசமென்றும்
நிலையான சாரணை தாரணை தானென்றும்
ஏரப்பா இந்திரிய வட்டமென்றும்
எங்கெங்கும் நிறைந்தசிவ லிங்கந்தானே. 374

தானென்ற சிவலிங்க மியார்தான்கண்டார்
தன்னினைவைத் தானறிந்த பெயர்கள்கேட்டும்
மானென்ற மகாரமதை யறியாப்பேர்க்கு
மகாலிங்க தெரிசனை தான் கிடையாதப்பா
வானின்று வளர்ந்தமணி பூரகத்தில்
வடவரையா மேருவென்று வளர்ந்தலிங்கம்
கோனென்றுங் குருவென்று மானலிங்கம்
கூறவென்று லதினாலே பேசலாச்சே. 375

பேசாத வெழுத்தாச்சு மகாரமாச்சு
பேசவென்றால வாய்திறந்து பேசலாச்சு
கூசாத வெழுத்தலலோ குலையாதசெய்வங்
கூறுதற்கு மென்னாலே நாவுமுண்டோ
ஏசாதே வெளிதிறந்து சொன்னேனென்று
என்மக்கள் மனதிரங்கி வெளியேவிட்டேன்
காசாசை வைத்தவர்க்கு ஞானமேது
கருத்தறியா மடையருக்குக் காட்டொண்ணாதே. ()

ஒன்றான சத்தியடா வுறவுமாகி
யுன்னோடே பிறந்தகொண் ணூற் றொருபேரை
நன்றாக நசித்திடலா மவனங்கண்டால்
நாடாட்டால் நகைபுரிந்து பேசுவாளாம்
குன்றாதே யவனம்வைக்கும் போது நீயும்
கோடி தனை யிருந்தாலுங் குருவுக்கீவாய்
யன்றாட்டுப் பண்ணாதே மறக்காதே
மனதிரங்க மட்டுமடா குருவைக்காரே. 377

காரையா பன்னிரண்டு வருடங்காத்தாற்
காட்டுவார் மவுனமென்ற விஞ்சைதன்னை
மாராத வாழ்வல்லோ சிவயோகத்தால்
மயங்கினால் வருவதென்ன விழலாய்ப்போச்சு
பாராதே சந்தேக மாகமைந்தா
பார்த்தாக்காற் பாவம்வரும் தோஷமாகும்
நேராதே சந்தேகந் தெளிந்து நீயும
நிஷ்டையிலே நின்றக்காற் காட்டுவாளே. 378

காட்டுவாள் குருமொழியை தவறுவண்ணங்
காரணமே பூரணமே யென்றுபோற்ற
கூட்டுவாள் தன்னோடே யுறவதாககிக்
கூறுவாள் மவுனமென்ற விஞ்சையெல்லாம்
பூட்டுவாள் கற்பமறிந் துண்ணச்சொல்லிப்
புகழ்ந்திடுவா ளென்மகனே யென்றேபோற்றி
மாட்டுவாள் நமனையுந்தான் மாண்டுபோக
யாருத வாசியிலே யேற்றுவாளே. 379

ஏற்றுவாள் கண்மணியே மகனேயென்று
ஈசனுக்கு மேலாக யிருக்கச்சொல்வாள்
வாழ்ந்துவா ளமுதமெல்லா முனக்கேயீந்து
வந்தவினை யற்றிடவே வாகுமீவாள்
மாற்றுவாள் பிறவிதனை வரவொட்டாமல்
மயக்கமென்றமாயையெல்லாம்வாங்கிக்கொள்வாள்
ஏற்றுவா ளீராறு தளத்தினோடே
யென்மகனே யென்றுசொல்லிக் கூறுவாளே. 380

கூறுவதற் கெளிதாமோ அவடன்கோலம்
கோலமென்ற கோலமெல்லாம் வெகுவாங்கூற்று
சேருவது கெதியறிந்து சேருவாளாஞ்
செகத்தோடே கூத்தாடித் திரிகுவாளாம்
ஏறுவதி லாடாதி வேறுவாளாம
என்தாயாள் முகமாறி யாடுவாளாம
மேருவிலோர் கால்மிதித்துக் கொள்ளுவாளாய்
மெல்லியடா நல்லவளாம் வருகுவாளே. 381

வருந்தாத பாவிகட்கு வருந்துவாளோ
வம்புசொலும் வீணர்தங்க ளிடஞ்சேர்வாளோ

பொருந்தாத பேர்களுக்குப் பொருந்துவாளோ
புல்லர்களை நம்பியுந்தான் வருகுவாளோ
இருந்தாலு மவுனமதை யெண்ணினாலும்
என்தாயைப் போற்றார்க்கு வருவதுண்டோ
திருந்திடவே யலையாமல் நிலையைப்பாரு
சீவன்முகத ஞானத்தற்கு நீக்கம்பாரே. 382

பாரடா இன்னமொரு கிருதங்கேளு
பாவமெல்லாம் பறக்குமடா யிதினால் மைந்தா
ஆரடா வில்வவேர் பலந்தான் நூறு
அப்பனே நறுக்கியதைப் பாண்டத்திலிட்டு
நேரடா சலந்தானும் படிதான் நூறு
நீமகனே வார்த்திடுவாய் பாண்டத்துள்ளே
ஏரடா வேராவிறகா லலலேமுடி
பொன்மக்காள் காய்ச்சிடுவாய வற்றத்தானே. 383

தானென்ற சலந்தானும் படிரெண்டாகத்
தவறாமற் காய்ச்சியதை யிறக்கிக்கொண்டு
கோனென்ற குருவருளால மரியென்றோதி
குமரிசிவ காமிக்குப் பூசைசெய்து
வானென்ற மருதமவேர் பலந்தான்பத்து
வளர்கண்ட ரகத்திரியும் பலந்தான்பத்து
கோனென்ற சூதுவதை பலந்தானொன்று
கூட்டியே நறுக்கியதை யெடுத்துக்கொள்ளே. 384

கொள்ளடா தூளதாக்கி கலம்வாங்கி
குருவான தேசியென்ற மனதிற்கொண்டு
அலையாமலே லோகமதை யெடுத்துக்கொண்டு
அப்பனே குமரிச்சாறு படிதானாறு
வல்லடா வாங்கியதைப் பதனமாய்ப்பண்ணி
மைந்தனே வாலுழுவை பலந்தானாறு
சொல்லடா கிரிகிதை வெவ்வேறாகக்
கூட்டடா சாற்பலமவ் விதமாமே. 385

ஆயடா கடுரோகணியுடைத்தா
அப்பனே யாரநதை யொடுமலைந்துசேர்த்து
ஓமடா வித்துப்புக நிப்புகாரம்
ஓகோகோ விராகன்மூன் றெவ்வொன்றாகத்

நாமடா முப்புசுண்ணம் விராகனென்று
நலமாக நிறுத்தெல்லாம் வாங்கிக்கொண்டு
வாமடா வடித்துவிட்டுச் சாமம்நாலு
வளமாக வரைத்ததையும வாங்கிக்கொள்ளே. 386

கொள்ளடா முன்சொன்ன கஷாயந்தன்னிற்
குழித்தைல மருந்தோடு குமரிச்சாறும்
அல்லடா வொன்றாகச் சேர்த்துமைந்தா
ஆவின்நெய் படியுந்தா னிரண்டுசேரு
சொல்லடா வொன்றாகக்கிட்டி ககாய்ச்சிச்
சொரூபமுள்ள நெய்தானும் பெழுகதானல்
வல்லடா விரக்கியதை யாறவைத்து
வாலைபஞ்ச சத்தியுட னியானஞ்செய்யே. 387

செய்யப்பா கிருதமதை வெளிவிடாதே
தேசத்தோர் தங்களுக்கே யீந்திடாதே
மெய்யப்பா வறட்சியொடு மீளைதீரும்
மேகவென்ற வுலகத்தி லோடிப்போகும்
ஐயப்பா வாயுவெல்லாங் கலைந்துபோகும்
ஆதார சகாபெத்தை யறியச்செய்யும்
பொய்யப்பா போகாது இயமனேது
பூதலத்திற் சாவேது புண்ணியோர்க்கே. 388

புண்ணியவா னவர்க்குக் கிட்டுங்கிட்டும்
பொய்பேசும் புல்லருக்குக் கிட்டாதப்பா
தன்னிலைவாய் கிருதமதை வராகன்மூன்று
சதியமாய் மண்டலந்தா னிருபோதுண்ணக்
கன்னியமேறன் மனியாடன் கிருபைதங்கும்
கலவியிலே மிச்சமடா மோகமுண்டு
ஜன்னிசுர முள்ளதெல்லாந் தொலைந்துபோகுஞ்
சுராந்தானும் நிலைதனிலே தங்குமப்பாரே. 389

பாரப்பா பாவிகட்குக் கிருதமீந்தாற்
பராபரையாள் சேவையுமே கிடையாதப்பா
ஆரப்பா விப்படித்தான் சொல்வாருண்டோ
அகத்தியமா முனிபோகேனைக்காய்ச் சொன்னேன்
நேரப்பா வெறுப்பமை மென்றிடாமல்
நிஷ்டையொடு சமாதியிலே நின்றுகொண்டு

வேரப்பா தவம்பத்ம கிரியிலேதான்
வெகுகோடி காலமெல்லா மிருந்தேன்காணே. 390

காணடா தவசுசர வணையிலேநான்
கலந்தெழுந்த மேருவென்று மதிலுண்டாகித்
தானடா பரங்குன்ற மதுவேயாகிச்
சாமதிலே வெகுகோடி காலமட்டும்
நானடா வெளிபோறித் தேவிபாதம்
நலமான வசுரர்குல மறுக்கவென்று
வீணடா பேசாமல் வேடமிட்டு
விரைநதேறிக குருமலையில் வாழ்ந்தேன்பாரே. 391

பாரப்பா அம்மலையி னுச்சிமீதிற்
பரமசிவனெனைக்கண்டு பணிந்துகொண்டால்
ஆரப்பா அசுரர்குல மறுக்கச்சொன்னார்
ஆத்தாளுஞ் சத்திவடி வேல்தானுள்
நேரப்பா அதிலிருக்குஞ் சித்தர்கோடி
நீரார்கா ணென்றுசொல்லி யென்னைக்கேட்கத்
தேரப்பா பரவெளிக்குக் குருவாம்நானுஞ்
சிறுவயது மைந்தனென்று செப்பினேனே. 392

செப்பிடவே சித்தரெல்லா மெனைப்பார்த்துச்
சிவமுருகா கயிலாச வாணியென்று
ஒப்பியே யெல்லோரும் பணிந்தாரென்னை
யுறற்பெருமை யெல்லா மவருக்கீந்தேன்
அப்பியே யறிந்தார்கள் சித்தர்கோடி
யதிலிருக்கோ மென்றமொழி யவர்க்குச்சொல்லி
தப்பியே செந்தூரிலே மேருவேறிச்
சண்டாள வசுரர்களை வதைத்தேன்பாரே. 393

பாரப்பா குருமலையைப் பதிப்பாரு
பாதனில்லை யொருவருந்தான் சொல்லமாட்டார்
ஆரப்பா அம்மலையின் பதிபேயாரம் |டேன்
அனந்தமடா குகைகளெல்லா மடைத்துப்போட்
நேரப்பா செந்தூர மதிலேகட்டி
நிலையான கனையெழு மடபரங்கள்சோடி
தேரப்பா கணங்களென்ற மரங்கள்கோடி
செகத்தனிலே சொலலாதே தெளிவுதானே. 394

தானடா தானிருந்து தவசுசெய்து
சத்திவடி வேலுருவம பெற்றேனங்கே
கோனடா குருமலையைப் போலேமைந்தா
குவலயத்தில மற்றுமொரு கிரிதானேது
தானடா அதிலிருக்கும் பெருமை தன்னை
கவிகளுஞ் சித்தர்களுஞ் சொல்லாசொல்லா
வானடா மவுனமது அறியவென்றால்
வாடாத கிரிதனக்கு வருகுவாயே. 395

வருகுவா யெனைநினைத்து வாலைவிஞ்சை
வருத்துவாய பராசக்தி யருளைப்போற்றித்
தருகுவே னவர்களுக்கு ஞானமெல்லாஞ்
சண்டாளத் தத்துவங்க டொலைந்துபோகும்
மருகுவாய மவுன முண்டு அமுர்தங்கொண்டு
மாசற்ற பெருவெளியில மனதிற்கொண்டு
பெருகுவாய பேசாத வெழுத்தைத்தேடிப்
பேரின்ப மானந்த முந்தொட்டாடத்தாட்டே. 396

கூடப்பற் றிரிதுபோ ஞானப்பார்த்துக்
குவலயத்தி லலைவார்கள் தெய்வமென்று
ஆடாப் பொடிநீவா ரட்டபோது
அப்பலே கதைப்பாரப்பட்டா லறிவுமேது
வீடான விழிந்தால ஞானமேது
விந்துவிட்டால வலுப்போச்சு பாமையுழும்
பாடாறு மொருபோகப்பா திறகுஞ்சொன்னேன்
பலிக்குருக்கு அத்தன்மை பலிலைதானே. 397

காமென்ற பொருளைத்தேடி சனங்கள் கூடிச்
சண்டாளத் தத்துவப்பேயப் பிடித்துக்கொண்டு
கோமென்ற குவலயத்தி லொருவரைத்தேடிக்
குருவிறைப் பாசபதிற் கூட்டப்பேச்சு
தாமென்ற மாயமந்தங்கள் பேய்ப்பேசி
தமனைறக்கேயாளாகப் போனைப்பாவி
சேமென்ற நெறியொழுங்கறிந்துப்போசா
செப்பிட்டா மனதுறுதி யாகாதாரே. 398

பாடா தாமமென்று புண்ணியமென் றப
டாசனிலே செயத்துக்கு அலைவாயினை

ஆரடா தர்மமென்ன புண்ணியமென்ன
ஆகாச சதாசிவத்தி னருளைக்கண்டால்
நேரடா சிவத்தையுந்தா னறியாவிட்டால்
நீணிலத்திற் றருமங்கள் நிலைகூடாது
காரடா சிவமல்லோ வேகபீஜங்
கண்டுகொள்ள மவுனத்தைக் கருதித்தானே. 399

தானென்ற வேகமந்தப் பீஜத்தாலே
சற்குருவாம் சடாட்சரமும் நாமேயாகும்
கோனென்ற அவ்வைக பீஜமானால்
குருவான மகாரமல்லோ அதுவாய்ப்போச்சு
நானென்று சொல்லிவிட்டே னுங்களுக்கு
நலம்பெறவே யுப்பவிட்டா வீணாய்ப்போச்சு
தேனென்ற வுபபதையுஞ் செப்பிடாதே
செப்புகிறே னுவருப்பு ஆதியாரே. 400

பாரப்பா வுவருப்பு பூமிநாதம்
பரமசிவன் பீஜமென்று மிதற்குப்பேரு
ஆரப்பா விதைமறந்தார் பெரியோரெல்லாம்
அகத்தியமா முனியேகேளுனக்காய்ச்சொன்னேன்
நேரப்பா கள்ளர்பற்றும் மறவநாடு
நிலைப்பான பாலைவனத் தேசமைத்தா
சேரப்பா காலைகண்ட முனிவோர்பக்கஞ்
சென்றெழுந்த மேற்புரத்திற் றெளிவாய்க்காணே.

காணடா அதிலேதா னுவருப்பாகிக்
கண்டுகொள்ளே அஞ்சுவர்ண மாகத்தோன்றும்
தானடா கதிர்போலே வளர்ந்துநிற்குஞ்
சத்தியமாய் பனியொளிவு வீழ்குமுன்னே
கோனடா மசியென்றே சாபந்தீர்த்துக்
குருவான பராபரையாய் மனதிலெண்ணி
வானடா வாய்பேசா தெடுத்துக்கொண்டு
வையகத்தோ ரறியாமல் பதனஞ்செய்யே. 402

செய்யப்பா சுத்தசலந் தன்னிலேதான்
சேரவினிக் கரைந்ததையுந் தெளியவைத்து
ஐயப்பா பத்துமுறை யிதுபோற்காச்சு
அப்பனே யுப்பதுதான் வெளுத்துப்போகும்

மெய்யப்பா வுப்பதையும் பதனம்பண்ணி
மேலான பஞ்சசதத்தி தியானஞ்செய்து
பொய்யப்பா சொல்லவில்லை யிந்தநூலிற்
புத்திரனே வாதமெல்லாங் கொள்ளையாச்சே. 403

ஆச்சப்பா வுப்பைவிட்டால் வாதம்போச்சு
ஆகாது காயசித்தி யையாவையா
மூச்சடா முன்பின்னுயச சொல்லவில்லை
மூடருககு இப்பூவுங் கிடையாதையா
காச்சடா காசினியிற் கிட்டுமோசொல்
கருத்துவைத்து மனதிரங்கிக்கலந்துசொன்னேன
ஏச்சடா விந்தப்பூ கிடையாதையா
எமனையுந் தானடித்துத் தள்ளுப்பாரே. 104

பாரடா தேவிபரா பரையுந்தேவி
பாவையர்கள் நாதமதை வாங்கிக்கொண்டு
ஆரடா சூடனைத்தப் பொடிந்துதநாவி
யப்பனே முப்பிண்டம் விராகன்ரண்டு
நேரடா வொன்றாகச் சேர்த்துமைந்தா
நீமகனே ரவிபுகதத்தி லெடுத்துவைத்து
வேரடா சாரமெலலாம் நிவர்த்திசெய்து
வேதாந்தப் பராபரையே வேண்டிக்கொள்ளே. 105

கொள்ளடா ரவிபீஜ மூப்பாய்ப்போகும்
குருவானை யுமையாளை காட்டிடாதே
அல்லடா பஞ்சசத்தி கிருபையாலே
யருளான வுப்பாலே பெலலாஞ்சித்தி
வல்லடா வல்லவர்ககுக கிட்டும்பாரு
வையகத்தில் மானிடர்ககுக கிடையாதப்பா
சொல்லடா விந்தமுறை போலிலமைந்தா
சொல்லார்கள் சொலலார்க ளுண்மைபாரே. 406

பாரப்பா பாரையுப்பு யாராதான்காண்பார
பரமசிவன் பீஜமென்றே இதற்குப்பேரு
ஆரப்பா பாரையுப்பு கல்லுப்பாச்சு
அடங்காத வழலையுப்பு என்றும்பேரு
நேரப்பா சாரையுப்பு என்றும்பேரு
நிலைப்பான தேவியுப்பு என்றும்பேரு

காரப்பா வுப்பையுந்தான் வாங்கிவர்து
கருத்தாக மசியென்றே சாபந்றே. 407

தீரடா வுப்பையுந்தான் சலத்திற்றுக்கித்
தேவிபஞ்ச சத்தியுட தியானஞ்செய்து
ஆரடா தெளியவைகதே யிறுத்துககொண்டு
அப்பனே பதத்துமுறை யடங்கிககாய்ச்சி
நேரடா வுப்பையுந்தா னெடுத்துப்பாரு
நீமகனே உப்பதுவும் வெநெந்துப் போகும்
வேரடா பேசாதே அலைந்திடாகே
வீரான பிண்டமென்று மிகறகுப்பேரே. 408

பேரென்ன விநதுவென்று நாதமாச்சு
பெரியோர்க ளறிவார்கள் மறமேூர்ககேளு
ஆரென்ன ஆரென்ன வருபமாச்சு
அடங்காத வாகமெலலாம் சொல்லையாச்சு
நேரென்ன நிலையென்ன வென்னைக்கணடால்
நிலைகுமடா பாதையுபபு நினைவாயமைந்தா
உனரென்ன ஜலமென்ன உறவோரென்ன
உற்றபா ரொன்றுமில்லை வெளியாய்ப்போச்சே

போச்சென்ற மிந்தவுப்பை விட்டிடாதே
பூலோகத் தார்களுசகு மநதிடாதே
மூச்சென்றும விடாபபடி யொன்றுப்சேர்த்து
முகதிதருஞ் சுணணமென்று முடிவுசெய்து
போசசென்று போசமற் பதலையபணணிப்
பேதையைபபோல் வாய்பேசா திருநதுகொணடு
காச்சென்று காச்சிவிடு லோகந்தார்கசு
கபடறற சிததமென்றுற் பமிகுப்பாரே. 410

பாரப்பா அமுரியுப்பு யார்தான்சொல்வார்
பாராபரத்தின் விநதுவென்று மிகறகுப்பேரு
ஆரப்பா அமுரிப்பு யிருபத்தைந்து
அப்பனே பாண்டத்தில் விட்டுககாய்ச்சி
நேரப்பா காசியது வற்றும்போது
நிலையாக வுப்பாக வளர்ந்துதோன்றுஞ்
சேரப்பா வுப்பதிலே ஜலந்தான்வாரு
செப்புமசி யென்றேநீ சாபந்றே. 411

தீரடா வுப்பையுந்தான் ஜலத்தில்மைந்தா
தீர்க்கமுடன் கரைத்தபின்பு தெளியவைத்து
ஆரடா தெளிந்தஜல மிருந்ததுகொண்டு
அப்பனே பத்துமுறை யடங்ககாய்ச்சி
நேரடா வுப்பையுந்தான் பார்க்கும்போது
நிலைத்திடுமே யுப்பதுதான் வெந்துப்போகும்
வேரடா வுப்பையுந்தான் பதனம்பண்ணி
விராகத்தான் பாதமதைப் பணிந்துகொள்ளே. 412

கொள்ளடா இவ்வுப்பு போமேகோரங்
குவலயத்தி லிலையடா மகாளமகான்
அல்லடா காயமென்றுஞ் சாரமென்றும்
அழுகான ஆதியுப்பு என்றும்பேரு
வல்லடா வல்லவர்க்குக் கிடைக்குமையா
மற்றோர்க்குக் கிடையாது வருந்தினாலும்
கொல்லடா தவமேலாம் மதனூற்சாருங்
கொள்ளைகொண்ட வாதமெல்லாம் பலிக்குப்பாரே. 413

பாரப்பா புளியுப்பாப் பாதகக்கு
பார்சனிலே ஞானமுந்தான் பலியாதையா
ஆரப்பா புளியென்றன் மூலமாகம்
அப்பனே கருநெல்லி யென்றும்பேரு
நேரப்பா அனதியென்றும் இதற்குப்பேரு
நிலையான ஏகாயமென்றும் இதற்குப்பேரு
வேரப்பா வேறிருந்தே அலைந்திடாமல்
வேண்டியதோர் புளியதனை யெடுத்துக்கொள்ளே. 414

கொள்ளடா பாண்டத்தி லடைத்துமைந்தா
துருவான சூடுற்றதான் பலமொன்றாக
அல்லடா சோதியாய் ஜலந்தான்விட்டு
அப்பனே கரைத்ததுடன் தெளியவைத்து
வல்லடா வாலையுட தியானஞ்செய்து
வாயடா ஜலந்தனையிருந்ததுக் கண்டோர்ச்
சொல்லடா மாயசத்திவிதி புறநான்பார்த்து
சுருதிமுடி பிறந்தவிடந் தன்னைக்காணே. 415

காணடா வுப்பதுவும் வெந்துப்போகும்
கைகண்ட வித்தையடா யார்தான்சொல்வார்

தானடா வுப்பதையும் பதனம்பண்ணிச்
சத்திசிவ காமியென்று மனதுட்கொண்டு
நானடா சகலசித்து மாடிக்கொண்டேன்
நமன்வினையு மூடறுத்து வெளியில்வந்தேன்
கோனடா கோளருளாற் பாக்கிறசென்றேன்
கூறுகிறே னிதற்குவமை குங்குமிதாமே. 416

தாமடா தானவனுந் நிலைக்கவேணும்
சத்தியமாய் மூன்சொன்ன மூன்றுப்பூவும்
ஆமடா அமுரியுப்பு நெல்லியுப்பு
ஆகவுமஞ் சுப்பென்றே அறிவாற்கண்டு
ஓமடா பஞ்சசத்தி யிதுதாமென்றும்
ஓங்காங்கா பஞ்சகர்த்தா னிவர் தானென்றும்
வாமடா வாமனென்று ரூபங்கொண்டு
வாங்கிமேலே னிந்தவுப்புத் தொகைதான்கேளே. 417

கேளடா நவலோக மெல்லாந்திரட்டி
கிருபையுடன் காந்தமுந்தா ளுருகியாகும்
ஆளடா குகமுந்தானை கட்டிப்போகும்
அபாயமே பாதையன மெல்லாங்கட்டும்
நாளடா தாரமுந்தான் வாங்கிவந்து
நலமான குமரிச்சார் சுருக்குமிட்டு
வாளடா சாமமொன்றப் பாடியேயிட்டு
வாங்கடா தாரத்தின் வகைகாண்பாரே. 418

பாரப்பா வாங்கியே தாரத்தன்னைப்
பாரமையாள பாக்கத்திற் பூசைசெய்து
ஆரப்பா பஞ்சசத்தி யுபயையெல்லாம்
அரைத்தநீவாய் வல்லதுவிட்டு சாமம்நாலு
நேரப்பா அரைத்ததையும் வழித்துமைத்தா
நிலையான வுப்பையுந்தான் வில்லைசெய்து
நேரப்பா வுலைதனை நகதே யெடுத்துக்கொண்டு
சித்தக்கக்கிச் சாரையுந்தான் வாங்குவாயே. 419

வாங்கடா சாறுவிட்டு வில்லைதன்னை
வாடாமற சாமமொன்றைரைத்துக்கொண்டு
தாங்கடா அரைத்ததையுந் தாரத்தன்னிற்
சத்தியமாய்ப் பூசசம தனமதாக

ஓங்கடா யுலரவைத்துச் சிலைமண்செய்து
ஓகோகோ பகதெருவிற் புடங்கான்போடு
நாங்கடா தேவிதனைப் பூசைசெய்து
நலமான தாரமதை யெடுத்துப்பாரே. 420

பார்க்கையிலே தாரஞ்செந் தூரமாகிப்
பதினாயி ரங்கோடி காந்திமீறும்
ஏர்க்கவே குருவருளா லறிய வேணும்
இல்லாட டாற் கைமுறையு நப்பாவண்ணஞ்
சேர்க்கையிலே செந்தூரந் திடமேமெந்தச்
செப்பாதே அகத்தியமா முனியேயையா
காககையிலே யுனையறிந்து காகாமைந்தா
காககாட்டா லென்னவுண்டு கண்டுகொள்ளே. 421

கொள்ளடா காய்பிரதகை யுருக்கிமைந்தா
குருவறிய அணுவளவு மீந்தாயானால்
அல்லடா தாயபிரமம பழுததுப்போகும்
அதுவாயி ரத்தெட்டு மாற்றுமாகும்
வல்லடா வல்லவர்கள் வெளிவிட்டார்கள்
வாயவீணர் தங்களிடம் பேசிடார்கள்
சொல்லடா விதினாலே அனந்தங்கோடி
தொந்கோபென் றுடடா சூட்சப்பாரே. 422

பாரப்பா வணுவளவு பூண்டாயானல்
பாலகனே நின்றேகங் காந்திமீறும்
ஆரப்பா தேகமுந்தான வலுத்துப்போச்சு
அனந்தவெகு கோடியட்டு மிருக்கவைக்கும்
தேரப்பா விதையறியா வுலுகநருகு
நிசமேது பொய்யேது நினைவேது
காரப்பா குருபாக பண்டிக்காரு
காலாநத செந்தூரக கனலைககாரே. 423

காரடா செந்தாரப் போக்குகோடி
களங்குவகை யனந்தமெல்லா மிதற்குளாடும்
ஆரடா தாரகதின் செந்தூரம்போல்
ஆ ரது கவனசித்தி மரிணயார்க்கும்
ஊரடா வுந்தி நினை வட்டந்தோணும்
ஊசிவழி தானறிந்தே யுணமவைக்கும்

ஏரடா வெட்டிரண்டுமிதுவேகாட்டும்
வென்மக்க ளின்னமொன்று எண்ணிப்பாரே. 424

பாரப்பா பஞ்சசத்தி தீயானத்தாலே
பாலகனே செந்தூரம படைக்கலாச்சு
ஆரப்பா அஷ்டாங்க முடிவுவேணும்
யாகாதி தர்ப்பணங்க ளனந்தம்வேணும்
நேரப்பா விராகத்தாள பூசைவேணும்
நிலையான குலதெய்வ மறியவேணும்
சேரப்பா சிந்தையொன்று யிருக்கவேணுஞ்
சொல்லாட்டாற நீநரகில் வீழ்வான்காணே. 425

காணடா நரகமதில் வீழ்ந்திடாமற்
காமப்பாற் கானற்பாற் கனலையுண்டு
தானடா மூப்பாயி னமுதமுண்டு
சாதித்து நங்கையஞ்சுஞ் சார்பாயுண்டு
வீணடா வீண்பேச்சுப் பேசிடாமல்
வேதாந்த வுப்பைத்தும் விரித்திடாமற்
கோணடா குருபாத மறிந்தே நின்று
குவலயத்திற் சித்துவிளை யாடுவாயே. 426

ஆடுவாய் சித்துகளை னந்தங்கோடி
அம்மம்மா லென்றமினித் தெரிந்திட்டாலும்
பாடுவாய் பலபாஷை வந்திட்டாலும்
பராபரயா நீயிருந்து வாழ்ந்திட்டாலும்
நாடுவாய் சரமாறி யிருந்திட்டாலும்
நலமான போகமெல்லா மறிந்திட்டாலும்
கூடுவாய் தில்லையிலே கூடினாலுங்
குவலயத்திற் சித்துவிளை யாடாதென்றே. 427

ஆடாதே நீபடித்த வித்தையெல்லாம்
அப்பனே பணம்பறிக்கப் படித்தால்போலே
நாடாதே ஜெகத்தோரை மயக்கிடாதே
ஞானியென்று ஜெகந்தனிலே அலைந்திடாதே
கூடாதே ஜெகத்தோக ளிடத்திற்சேர்த்து
கூச்சலிட்டு வாய்வீணும் பேசிடாதே
பாடாதே சாஸ்திரங்கள் பேசிடாதே
பரமகுரு தன்னைக்கண்டு பணிந்துகொள்ளே. 428

கொள்ளடா குருக்கொடுத்த வித்தையெல்லாம்
குவலயத்திற் காட்டிவிட்டாற் பலியாதப்பா
அல்லடா வைத்யமென்ன வாதமென்ன
அப்பனே பாவம்வரும் தோஷமாகும்
கல்லடா வுன்மனது வுருகாதப்பா
கண்டாரைப் பெண்டீரென் றெடுத்திடாதே
சொல்லடா விந்தவகை யெனக்குமைந்தா
சொல்லாட்டாற் பல்லுதிர வடிப்பேன்பாரே 429

பாரப்பா வேடமிட்டே யலைந்திடாதே
பாவையரை யணுகினமு மருவிடாதே
ஆரப்பா பொய்யொன்றுஞ் சொல்லிடாதே
யடுத்தோரைக் கெடுக்காதே ஐயாஐயா
நேரப்பா யாரொருவ ருறவும்வேண்டாம்
நீமகனே யொருவருட பகையும்வேண்டாம்
தேரப்பா விருந்தபடி யிருந்தால்ஞானஞ்
செப்பாதே குலதெய்வந் தனைனைப்பாரே. 430

பாரப்பா பஞ்சசத்தி கிருபையாலே
பார்மகனே குலதெய்வந் தன்னைமைந்தா
ஆரப்பா ஏகமென்றே வெழுந்தேயாதி
அப்பனே நசநிட்டைசக சிதுவேயாதி
நேரப்பா வொன்றான பொருளேயாதி
நின்றிடுவாய் சதாகாலம் நினைவிற்றாக்கி
ஏரப்பா இடைவிட்டு மறந்திடாதே
ஏனபூவைப்போ லிருந்துமனமடங்கிக்கொள்ளே.

கொள்ளடா மனதடங்க ஞானங்காட்டுங்
குழந்தையைப்போல்போசவைக்குங்குலதெய்வந்தா (ன்
அல்லடா விந்துவட்ட மறியாப்பேர்களே
யர்தரிது அஷ்டகர்ம யாடவொன்றால
செல்லடா அரவமதைப் பிடித்துவந்து
சிங்கென்று மரவததின் சிரசில்மேவிச்
சொல்லடா ளெதிரியுட பெயரைமாட்டுச்
கூட்டடா குருதகேட்டில் வரைந்துபாரே. 432

பாரப்பா அரவத்தின் வாயினுள்ளே
பதித்திடுவாய் சிட்டையுந்தான் சவ்வத்தானும்

ஆரப்பா அரவமதை தலைகீழ்கட்டி
அப்பனே காராவின் நெய்யைவார்த்து
நேரப்பா காஞ்சிறையின் சிப்பியாலே
நீமகனே மசியென்றே யாகஞ்செய்து
தேரப்பா அரவமதைப் பொசுக்கிமைந்தா
தேவிப்பஞ்ச சத்தியுட னியானங்கொள்ளே. 433

கொள்ளடா விப்படியே சரந்தான்மாறி
கொளுத்தடா வெதிரியுந்தான் கொதித்துப்போவா
அல்லடா விதைத்திர்க்க வரிசே மைந்தா [ன்
அப்பனே அவன்குலமும் பொசிக்கிப்போகும்
சொல்லடா பொசிங்கியுந்தான் நரகில்வீழ்வான்
சொன்னடா கொடியதொரு பாவம்பாவம்
மெள்ளடா விதியாலே வருவதென்ன
மெய்ஞ்ஞானிக் காகாது விரைந்துபாரே. 434

பாரப்பா வின்னமொரு கருமஞ்சொல்வேன்
பார்தனிலே செருடனையுங் கொண்டுவந்து
ஆரப்பா முன்சொன்ன படிணம்போலே
யாகாதி தன்னிலேதான் பொசிக்கிப்போடு
நேரப்பா வெதிரியுந்தா னிறந்துபோவான்
நிலையான பஞ்சசக்தி கிருபையாலே
வேரப்பா வெறும்பேச்சிப் பேசிடாமல
விராகந்தா பாதமதைப் பணிந்துகொள்ளே. 435

கொள்ளடா விதிறைலே கோடிபாவம்
கொடிதான தோஷமடா செருடதோஷம்
அல்லவடா வந்தோஷந் தொலையாதப்பா
ஆரனையுந்தான் விடுகாது யற்றோர்க்கேது
வல்லடா வெளியாகச் சொன்னேனொன்று
வையகத்தோர் நம்மைந்தா னைசிடாமல்
கொல்லடா கொடுமைகளைச் செய்தபேரைக்
கூறுவே னின்னமொரு குருவிற்றானே. 436

தானென்ற தவசிகட்கே யிடுக்கஞ்செய்யுஞ்
சண்டாளர் தனைவதைத்தா ற சாபமில்லை
கோனென்ற குருத்துரோகஞ் செய்தபேரைக்
கொன்றாலுந் தோஷமில்லை குறியைக்கேளு

நானென்ற செம்போத்தைப் பிடித்துவந்து
நாட்டுவாய் பரியென்றே சிரசிற்சுற்றி
கோனென்ற குருவினுட வருளினாலே
கூசாதே சிகாரமதைத் தகட்டிற்சாத்தே. 437

சாத்தடா வெதிரியுட பெயரைக்கூட்டித்
தலைமாறித் தகட்டிலையும் வரையும்மைந்தா
ஏத்தடா மசியென்றே தியானஞ்செய்து
என்மக்காள் முன்சொன்ன படினம்போலே
வாழ்த்தடா வாலைபஞ்ச சத்தியென்று
வருந்தடா செம்போத்து தலைப்பொசிக்கிப்
பார்த்தடா வெதிரியைத்தான் பார்க்கும்போது
பாரதனிலே லகிரிகொண்டே யலைவான்பாரே. 438

பாரப்பா லகிரிகொண்டு கழுதையாவான்
பார்தனிலே மனிதருக்குத் தோற்றமாட்டான்
ஆரப்பா தீர்ப்பதற்கு முடியாதையா
அப்பனே யாததாடன் னருளையாலே
நேரப்பா வுனக்கிடு சொல்லப்போமோ
நீணிலத்தில் மனிதரெல்லாம் பகையுமாவார்
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
விடமுண்ட கண்டனையும் வேண்டிக்கொள்ளே. ()

கொள்ளடா தெய்வபஞ்ச சத்தியாலே
கொடியதொரு பூப்பூவின் குருவினாலே
அல்லடா வேங்கையெல்லாங் கைக்குளாடும்
அடங்காத அஷ்டசித்தும் கைக்குளாடும்
வல்லடா காந்தமுந்தான் பலலேபத்து
வையகந்தோ ரறியாமல் வாங்கிக்கொண்டு
சொல்லடா மேனியிலே யரசப்பாலுஞ்
சுத்தியே காந்தந்தின் மேலேபூசே. 440

பூசியே புடம்போட்டே யெடுத்துக்கொண்டு
புத்திரனே கலயத்தில் நொறுக்கிப்போட்டு
தேசியே காரமோடு வீரம்பூரம்
செப்பாதே பாஷாணந் தாரங்கூட்டி
வாசியே மனோன்மணியே வாவாவென்று
மனோசிலையுஞ் சிந்தண்டம் வகையாய்க்கூட்டி

கூசியே திரியாம லொவ்வொன்றுக்குங்
கூட்டுவாய் பலங்கால தாகத்தானே. 441

தானென்ற முன்சொன்ன முப்பூவோடு
சத்தியமாய் நெல்லியுப்பு அமுரியுப்பு
தேனென்ற வொவ்வொன்று விராகனென்று
தெளிவாகச் சேர்த்துமிந்தச் சரக்கினோடே
வீணென்று சொல்லாதே வஸ்துவிட்டே
விருப்பமுடன் சாமமுந்தான் நாலுமட்டும்
கோனென்ற குருவருளா லரைத்துச்சேர்த்துக்
கூறுவாய் மசியென்றே சாபந்தீரே. 442

தீரடா மருந்தையுந்தான் சுத்திபண்ணி
சிவநமசி வாயமென்று ஜெயித்துக்கொண்டு
சேரடா காந்தநத்திற் பிசறிமைந்தா
இல்லிட்டுச் சீலமண் செய்துகாணும்
நேரடா வச்சிரமாங் குகையில்வைத்து
நீமகனே யூதிடுவாய் மணிபோல்வீழும்
தேரடா மணிதனையும் பொறுக்கிக்கொண்டு
தீர்க்கமுடன் மருந்தையுந்தான் பிசறிக்கொள்ளே.

கொள்ளடா விப்படியே யைந்துநேரங்
குமரிபஞ்ச சத்தியுட தியானஞ்செய்து
அல்லடா வூற்றிவிடு சத்துமாச்சு
அப்பனே மெழுகதனுற் கருத்தான்கட்டி
மெல்லடா வுருக்கியே காந்தந்தன்னை
மேதினியோ ரறியாமற் சாய்க்கமைந்தா
வல்லடா கிண்ணமது வலுத்துப்போச்சு
வராகத்தான் நனை நினைந்து மனதிற்பாரே. 444

பாரப்பா வாதமெல்லாங் கொள்ளையாச்சு
பாலுண்ணத் தேகமுந்தான் வலுத்துப்போச்சு
ஆரப்பா மறைந்தபொருள் வெளியாய்சொல்லி
ஆவியுப்பு மனுதியுப்பும் வெளியேவிட்டேன்
நேரப்பா வித்தமுறை யொளித்தார்சித்தர்
நிச்சயமாய்வெளிதிறந்தே யுரைத்துபோட்டேன்
சேரப்பா முன்சொன்ன முப்பூமைந்தா
செப்பாதே பூநீரென் றதற்குப்பேரே. 445

பேராச்சு மூப்பூவின் பெருமைசொல்லார்
பெற்றபிள்ளைக ளென்றாலும் பேசிடார்கள்
ஆராச்சு அஞ்சாச்சு பிஞ்சுமாச்சு
அதிலடங்கும் வாதபித்த மனேகமுண்டு
நேராச்சு நிருவிகற்ப சமாதிக்கெல்லாம
நிலைக்குமடா மூப்பூவின் நிலையினாலே
வேராச்சு வீணருக்குப் பேசிடாதே
வேதாந்த மூப்பூவின் மார்க்கந்தானே. 446

தானென்ற மூப்பூவின் சுண்ணந்தன்னைச்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சாதித்தோர்க்குக்
கோனென்ற குருவாகுஞ் சுண்ணமப்பா
கூறுதற்கு வெளிதாமோ நாவுமுண்டோ
ஏனென்ற சுண்ணமென்றுற் சௌசமாச்சு
இருதயமாங் கமலமுமே பீடமாச்சு
கோனேன்ற மூப்பூவின் விராகன்பத்து
குருவான தேசியென்று நிறுத்துக்கொள்ளே. ()

கொள்ளடா வெடியுப்பு விராகன்பத்து
குருவான பாதவுப்பு விராகனொன்று
அல்லடா வபூரியுப்பு விராகன்பத்து
அப்பனே நெல்லியுப்பு விராகனஞ்சு
சொல்லடா இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்துச்
சொற்பமென்றே யெண்ணாதே யரசயபாலால்
வில்லடா ஆட்டுவாய சாயம்நாலு
விராகத்தாள் பாதமுடைமனதிற்றங்கே. 448

தங்கடா ஆட்டியே வழித்துச்சேர்த்து
தவறாமல் வில்லைசெய்து சாபந்தித்து
தங்கடா ரவிதனிலே புலரவைத்து
அப்பனே புலர்ந்தபின்பு எடுத்துமைந்தா
எங்கடா திரிந்துமினி யலைந்திடாமல்
என்பக்காள் பேனியச்சார் தன்னைவார்த்துப்
பங்கடா விலலைதனைப் பிரிந்திடாமற்
பராபரியே மாயியென்று பணிந்துகொள்ளே. ()

கொள்ளடா ஆட்டுவாய் சாயம்நாலு
குஞ்சரனைப் போற்றியுந்தன் வழித்துமைந்தா

அல்லடா முன்போலே புலரவைத்து
அப்பனே மருந்தையுந்தா னெடுத்துக்கொண்டு
சொல்லடா வேளைச்சார் சாமம்நாலு
சூட்டியே யரைத்ததையும் வழித்துக்கொண்டு
மெல்லடா முன்போலே புலரவைத்து
மேதினியிற் சித்துவிளை யாடுவாயே. 450

ஆடுவாய் கருதும்பை சாரைவாங்கி
யப்பனே முன்போலே சாமம்நாலு
நாடுவா யறைத்ததையும் வாங்கிக்கொண்டு
ரவிதனிலே புலரவைத்து நாடிப்பாரு
தேடுவாய் மரியென்றே சாபத்தீர்த்துச்
செபியடா நாற்றெட்டு உருவேயானால்
கூடுவாய் பத்தெருவிற் புடத்தைப்போட்டுக்
குருவான சுண்ணமதை யெடுத்துக்கொள்ளே. ()

கொள்ளடா விதினாலே வேதைகோடி
குருவான காயசித்தி கைக்குள்ளாச்சு
அல்லடா செந்தூர மனேகமாச்சு
அடங்காத வைத்தியங்க ளெல்லாஞ்சித்தி
வெல்லடா எமனேது பாசமேது
மேலான சுண்ணமதை யென்னசொல்வேன்
புல்லடா புல்லருக்குக் கிடையாதப்பா
புத்தியுள்ள பிள்ளையென்றாற் பேணிப்பாரே. 452

பராப்பா விம்மருந்தை யீந்தாயானாற்
பழமெனவே றனைவெடித்துப் பாழாய்ப்போவாய்
ஆரப்பா சொல்வாரோ பூமிநாதம்
அடங்காத காயசித்தி யெல்லாமாகும்
நேரப்பா யுவருப்பு ஆதிவித்து
நிலைத்ததடா பூமியுட நாதமாச்சு
தேரப்பா விதுவல்லோ வண்ணானுப்பு
செப்பாதே குருவாளை செப்பினேனே. 453

செப்பினே னிதுவல்லோ பூநீராச்சு
தேவிபஞ்ச சத்தியுட வருணமாச்சு
ஒப்பியே சொல்வாரோ மக்காள்மக்காள்
ஒருவருக்குஞ் சொல்லாதே யிந்தப்பேச்சை

தப்பியே போகாதே யிந்த நூலிற்
சாகாம லிருப்பதற்கு விபரங்காட்டி
மூப்புவியு மடங்குமடா வுவருப்பாலே
மோசமில்லை மோசமில்லை மொழிந்துபாரே. ()

பாரப்பா சுத்தஜலம் வேறிதென்று
பார்தனிலே மலையாதே மைந்தாமைந்தா
ஆரப்பா வுவர்நிலத்தி லன்றுபெய்ந்த
அழகான ஜலந்தனையு மெடுத்துக்கொண்டு
நேரப்பா முன்சொன்ன வுப்பையெல்லாம்
நிலையான சாபமதை நிவர்த்திசெய்து
தேரப்பா கரைத்திடுவா யிறுத்துவாங்கிச்
செப்பாதே ரவிமுகத்தில் வைத்துக்கொள்ளே. 445

கொள்ளடா காச்சென்று சொன்னமார்க்கம்
கூறுகிறேன் ரவிமுகத்திற் காக்கவேணும்
அல்லடா அகக்கிளியிற் காச்சினக்கால்
அப்பனே பூவதுவும் பாழாய்ப்போச்சு
சொல்லடா பூவதுதா னெடுக்கும்போது
சூட்சநிலை சொரூபநிலை தன்னைப்பார்த்து
வில்லடா யானந்தாரா யாகஞ்செய்து
விராகததா டன்னையுந்தான் நினைத்துப்போற்றே.

போற்றடா பவுனமென்ற விஞ்சைதன்னைப்
பூரணையே காரணையே யென்றேயோதி
ஏற்றடா வுன்னையுந்தான் நினைந்துபோற்றி
யென்னைப்போலே வாய்பேசா திருந்துகொண்டு
வாழ்த்தடா மூன்றெழுத்து விஞ்சைபார்த்து
வடவரையா மாயிரத்தெட் டிதழிற்சோதிப்
பார்த்திடா குலதெய்வந் தன்னைப்பார்த்துப்
பறையுப்பு வழலையுப்பு பாருபாரே. 457

பாரடா பறையுப்பு வெடியுப்பாச்சு
பாலகனே வழலையென்று மிதற்குப்பேரு
ஆரடா வெடியுப்பை யறிவாருண்டோ
ஆகாச கெங்கையென்ற வுவருநீராம்
நேரடா சுத்தஜல மதுதான்பாரு
நிலைக்கின்ற கங்கையடா பறையுமாச்சு

கேரடா விதையறிவா ருலகத்தோர்கள்
செப்புவார் வாய்மதங்கள் பேசித்தானே. 458

போமே அழியாதே மூப்பூமார்க்கம்
பிண்டமென்றும் நாதமென்று மிதற்குப்பேராம்
வாசியே நிறுத்துமடா விந்நூவால்
வல்லோர்க்குங் கிட்டுமடா மற்றோர்க்கேது
கூசியே திரியாதே வழலைமார்க்கம்
கோடான கோடிவகை கூட்டிவைக்கும்
நாசியே சுழிமுனையாய் விந்துநாதம்
நாட்டடா மூப்பூவை யறிந்துதானே. 459

தானென்ற மூன்றெழுத்தின் விபரங்கேளு
சத்தியமா யிடையின்சுழி முனையதாச்சு
நானென்றும் அகாரமென்றும் உகாரமென்றும்
நடுவணையா மகாரமென்று நாடினாலும்
தேனென்ற அகாரமென்று மகாரந்தானும்
தெளிவான வுகாரமுமூன் றெழுத்துமைந்தா
கோனென்ற மகாரமல்லோ சிவமுமாச்சு
குருவான அகாரமொடு உகாரங்கேளே. 460

கேளடா சிகாரமல்லோ வுகாரமாச்சு
திருவையுள்ள அகாரமல்லோ நகாரமாச்சு
ஆளடா மூன்றெழுத்து மதுவேயாச்சு
அம்மப்பா மூன்றெழுத்து மறியப்போமோ
நாளடா குலதெய்வந் தன்னைப்பார்த்து
நாடுவாய் மசிநசி யென்றோதுமைந்தா
தேளடா வாசிபத்தா யிரமடங்கக்
தேவனென்றும் விஷ்ணுவாக் கரந்தான்பாரே. 461

பாரப்பா ஜெகமெல்லா மவரைக்கண்டாற்
பாராளு மரசனென்று பணிவாருன்னை
ஆரப்பா விஷ்ணுசக கரத்தினாலே
அவனியெல்லா மொருகுடைக்கீ ழாளவைக்கும்
நேரப்பா ஐம்பத்து லட்சமானால்
நிலையான காயசித்தி நிலைத்துப்போச்சு
தேரப்பா கொடியுந்தா னடக்கிற்றுனைத்
தேவிசத்தி வேலுனக்கு வாய்க்குங்காணே. 462

காணடா குலதெய்வந் தன்னைப்பார்த்துக்
கூரடா வாசியினு லறிந்துகொண்டு
தானடா விம்மென்றே சதா நீபோற்றித்
சுண்ணமடா மூன்றெழுத்துத தயவினாலே
நானடா விப்படியே யறிந்ததாலே
நாதாந்த வடிவேலும் நமக்குள்ளாச்சு
கோனடா இம்மென்ற மவுனம்விட்டாற்
குடிகெட்டு இடிவிழுந்து கொல்லும்பாரே. 463

பாரப்பா முன்சொன்ன பூவுங்கூட்டிப்
பாலகனே பாறையுப்புச் சமனாய்ச்சேர்த்து
ஆரப்பா அமுரியுப்பவ் விடைக்குச் சேர்த்து
அப்பனே முன்சொன்ன மூலியெல்லாம்
நேரப்பா அரைத்திடுவாய் முன்போலமைந்தா
நிலையான காரமுந்தான் சமனாய்ச்சேர்த்து
தேரப்பா முன்போலே புடமேபோட்டுத்
தேவிபஞ்ச சத்தியுட தியானங்கொள்ளே. 464

கொள்ளடா வெடுத்திடவே சுண்ணமாச்சு
கொடியகொரு கிரணமெல்லாங் கெதித்துப்போச்
சல்லடா சுண்ணமது சுருக்கமெத்த
அண்டபிண்டஞ் சேர்ந்தெழுந்த அருமையாலே
வில்லடா எந்தெந்த துரைகளாலும்
வெகுசுருக்கு வெகுசுருக்கு வெடியுப்பையா
சொல்லடா சொல்லப் போகாதப்பூவைத
துருசினுட கொடுமையுந்தான் கூட்டுவேனே. 465

கூட்டுவேன் துருசதுவும் வீரகன்பகது
சொல்லாக வேணசாரங் கன்னிநூர
நாட்டுவாய் யோட்டுமதை யெடுத்துக்கொண்டு
நலமாக பூப்பூவின் சுண்ணந்தன்னைக்
கூட்டுவாய் பணவிடைதான் மேலேதூவி
குருவான பராபரையை மனதிலெண்ணி
வாட்டுவாய் புடமேகருவிற் புடத்தைப்போடு
வாடாத சுண்ணமது வலுத்துப்போச்சே. 466

போச்சடா துருசினுட சுண்ணம்போலே
பூதலத்தி லிதுபோல் கிடையாது புகழ்ந்துபாரு

வாச்சடா மேருவுந்தா னிதிலுண்டாச்சு
வெள்ளளுந்தா னனுதினமும் வாழலாச்சு
ஏச்சடா சொல்லவில்லை யிந்தச்சுண்ணம்
ஏகாந்த முப்பூவின் கிருபையாலே
மூச்சடா தானடங்கி மேலேயேறும்
மூதண்டச் சுண்ணமென்று டர்க்கம்பாரே. 467

பாரப்பா சவுக்காரம் விராகன்பத்து
பாலகனே வாங்கியடா நிறுத்துக்கொண்டு
ஆரப்பா மேனிச்சார் சாமமொன்று
அப்பனே சுருக்கிட்டு எடுத்துவாங்கி
நேரப்பா முப்பூவின் சுண்ணத்தாலே
நீமகனே பணவிடைதான் சுற்றிப்பூசி
தேரப்பா பத்தெருவிற் புடதலைதப்போடு
சிவசிவா செந்தூரஞ் சிவந்துபோச்சே. 468

போச்சடா செந்தூரம் ரவிபோற்காந்தி
புவனையுடபீஜமென்ற மிகற்குப்பேரு
ஆச்சடா சவுக்காரச் செந்தூரம்போலே
ஆரறிவா ருலகத்தில் சித்தர்மைந்தா
வாச்சடா லோகமெல்லாம் பொன்னாய்ப்போச்சு
வாசியிலே யனுதினமும் வாழலாச்சு
பேச்சடா போகாதே யிந்தப்பேச்சு
பெலத்ததடா காயசித்தி வலுவைப்பாரே. 469

பாரடா விதனாலே நவலோகங்கள்
பாலகனே செந்தூர மாகிப்போகும்
ஆரடா முப்பூவின் சுண்ணம்வேணும்
அடங்காத காயசித்தி யாகவேணும்
ஏரடா வாசிமயி லேறவேணும்
ஏகாந்தப் பரதகோடே யிருக்கவேணும்
தேரடா நூல்பார்த்துந் தேறவேணுஞ்
ஜெகத்திலுள்ளோ ரறியாமல் வாழ்த்நத்தானே.

தானென்று சொல்வதற்கு வாயுமேது
சங்கற்ப மறியாரைச் சமயத்தோரை
நானென்று மென்னாலே சொல்லப்போமோ
ஞாயிறையுந் திங்களையுஞ் சேராப்பேரை

கோணென்றுங் குருவென்றுந் துதிக்கப்போமோ
குணமான மூப்பூவின் குருவில்லாட்டால்
தேனென்ற வமுதரச முண்ணப்போமோ
தெளிவான யோகம்விட்ட சித்திதானே. 471

காணடா கடுங்காரச் சுண்ணமாச்சு
கைகண்ட வித்தையடா சித்தர்சொல்வார்
தானடா பஞ்சசத்தி சுண்ணமென்றுந்
சராசரங்கள் முழுவதுமே தங்கமாச்சு
ஊனடா வுடலுயிரு முறவதாகும்
ஒடுங்காத காதகஞ் செந்தூரமாகும்
நானடா சுண்ணமதை யறிந்துகொண்டு
நானிலத்திற் சிந்துவிளையாடினேனே. 472

ஆடினேன் பஞ்சசத்தி கிருபையாலே
அடங்காத காயசித்தி யாகிப்போச்சு
நாடினேன் மூன்றெழுத்து விஞ்ஞையாலே
அடங்காத காயசித்தி யாகிப்போச்சு
கூடினேன் நங்கையஞ்சு முண்டதாலே
கோடான கோபுவரைக் குகையைக்காத்தேன்
பாடினேன் பாவமெல்லா மகற்றி யைந்தா
பஞ்சசத்தி வேலெடுத்து வந்தேகாணே. 473

காணடா யாகாதி பலக்கவேணும்
கண்மணியே அம்மணியைப் போற்றவேணும்
தானடா விராகதகாள் தியானம்வேணும்
சங்கற்ப மறிந்துமுறை சாரவேணும்
கோணா மனஞ்சோறு திருக்கவேணும்
துவிதபூவைக கண்ணைறிந்தே போற்றவேணும்
தானடா இப்பென்ற மவுனங்கண்டு
நாடினேன் சிவயோக வாழ்க்கைப்பாரே. 474

பாரடா பஞ்சசத்தி திசைகெல்லாம்
பாலகனே நவகிரக தியானம்வேணும்
ஆடடா ஆதித்தன் றனைநிறுத்து
அருளான வகாரமவரோ டவர்கூட்டம்
நேரடா வித்துவிட்டு ஓங்காரங்காட்டி
நிலைத்திடவே பூருவச் சூலமிட்டுச்

சேரடா விந்துக்கு ஊகாரஞ்சாத்திச்
செபித்திடுவா யும்மென்றே தியானங்கூடே. 475

கூடியே பஞ்சகர்த்தா ளைவருக்குங்
குவித்திடுவா யவரவர்கள் பீஜஞ்சாத்தி
சேடியே யாவமென்ற விராகுகேது
செபித்திடவே யவர்களுட பீஜமைந்தா
நாடியே யிராகுவுக்கேசங் காரஞ்சாந்தி
நாட்டிடு கேதுவுககுஹ்ரீங் காரமைந்தா
வாடியே திரியாமல் வநதுவட்டம்
மைந்தனே இட்டிடவே வாய்க்கும்பாரே. 476

பாரப்பா அவரவர்கள் பீஜமெல்லாம்
பாலகனே விந்துநடுக் குள்ளேவைத்து
நேரப்பா ஓங்காரஞ் சுந்திககட்டி
நிலைத்திடவே சூலமிட்டுக் குடபந்தன்னைத்
தேரப்பா தொப்பையமா விலையுஞ்சாந்திக
தெள்ளுதிடவே கன்னிநூல சுற்றிககட்டி
ஆரப்பா அடசதையும மடியிற்குகசி
அஷ்டகர்ம வாலையென்றே தியானங்கொள்ளே.

கொள்ளடா தேவிபரா சக்தியொன்று
குருவான பராபரதனை யணதிலெண்ணி
அல்லடா நீயாக சாலைகட்டி
அப்பனே நவசகிரகந தன்னைமாட்டிச்
சொல்லடா குளிகையும் யாகந்தன்னிற்
சொல்லியே இம்மென்று நடுவேசாத்தி
வில்லடா பூரணமும் வெளியாயப்போகும்
யேலான வேலவந்து வாய்ககும்பாரே. 478

பாரப்பா நவக்கிரகந் தன்னைமைந்தா
பரிவான ரவியல்லோ தாயுமாச்சு
ஆரப்பா சோமனொடு பஞ்சகாநதாள்
அடங்காத ராகுவொடு கேதுமைநதா
நேரப்பா இவர்கள்நவக கிரகமாச்சு
நிலையான நவரிக்க மென்றும்போர்
தேரப்பா இவர்களன்றிப் பூசையோது
தெளிநதவர்ககே பஞ்சசத்தி தருகுவானே. 479

தருகுவா ளஷ்டகர்ம வாலைமைந்தா
சத்தியமாய்த் தோலாசை யற்றபேர்க்கு
வருகுவாள் அங்கிலியு மென்றுசொல்லி
வாசியுமே யாயிரத்தெட் டடங்கினுக்கால்
உருகுவா யஷ்டகர்ம சித்தியாகும்
ஓகோகோ ஆசையற்று உறவுமற்றுப்
பெருகுவாய் இம்மென்றே மவுனம்பூட்டிப்
பேசாதே குலதெய்வந் தன்னைக்காணே. 480

காணடா மூன்றெழுத்தை யறியமாட்டான்
கங்குரவி தனைக்கடந்து இருக்கமாட்டான்
தானடா பந்தனங்கள் சொல்லக்கேளு
தாயாராம் பராசத்தி வாலைக்கெல்லாம்
கோணடா தீட்சைபத்தா மகாரபீடம்
கொளுத்தடா திக்குபந்த னங்களாக
நானடா பந்தனங்கள் செய்துமைந்தா
ஞாயிறிலே திங்களையு மடக்கினேனே. 481

அடக்கினேன் திக்குபந்த னங்களாலே
அஷ்டகெஜம் அஷ்டவஸ்து அருளுமாச்சு
மூடக்கினேன் மூன்றெழுத்து விபரத்தாலே
மூன்பின்னு யோடுகிற கலையுமாறி
மடக்கினேன் காலறிந்து மைந்தா நாளும்
மாருத வாசனையை மறந்துதள்ளித்
தடக்கிறா பேசாதே அகாரமூலஞ்
சாதித்தா லவராமென் றதுதான்பாரே. 482

பாரப்பா தேவிபஞ்ச சத்திக்கெல்லாம்
பாலகனே யானதமாம் பூசைசெய்ய
ஆரப்பா நிறைந்தவர்ன நகையுஞ்சீலை
யாத்தாட்கும் வடுகனுக்கு மங்கேசாத்தி
நேரப்பா கிரீடகுண் டலமுஞ்சாத்தி
நீமகனே விராகத்தாள தனக்குமைந்தா
வேரப்பா பேசாதே யாத்தாளுக்கும்
வெகுவாகப் பஞ்சசத்தி மேலேசாத்தே. 483

சாத்தடா மணிமந்த்ர திபதூபஞ்
சகலகலை வாணியென்றே யருளைப்போற்றி

வாழ்த்தடா இம்மென்றே மவுனந்தாக்க
வஸ்துவென்றே யுனைக்கானும் நினைந்துகொண்டு
ஏத்தடா மானதமாய் பூசைமெத்த
வென்மகனே தேகத்திற் பழுதில்லாமற்
காத்தடா பூசைசெய்வாய் மவுனமநோக்கிக்
காலனுந்தா னப்புறமுங் கடப்பான்பாரே. 484

பாரப்பா நமநமா வென்றுசொல்லிப்
பாலகனே பூஷணங்கள் பூட்டவேணும்
ஆரப்பா தேவிக்கிப் படிமே பூட்டி
யஷ்டகர்ம வாலையென்றே வருளைப்போற்றி
நேரப்பா செவ்வரளிப் புஷ்பத்தாலே
நீமகனே தேவிககர்ச சனையுஞ்செய்து
தேரப்பா விந்துவிலே மணக்கண்ணுடி
தேவிபஞ்ச சித்தமென்றே திடமாய்ப்போற்றி.485

போற்றுதற்கு லகுவல்ல வாய்ப்பேச்சல்லப்
புத்திரனே மூன்றெழுத்தை விட்டபோச்சு
ஏற்றுதற்கு மவுனமதை விட்டபோசு
எந்நாளு மஷ்டகர்மஞ் சித்தியில்லை
வாழ்த்துதற்கு ஆயிரத்தெட் டடங்குப்போது
வந்ததடா வாலையுட வழுதமைநதா
காற்றிலேயு மதிகமடா ஆதாரம்பாதங்
காட்டாதே லோகத்தார் தனக்குப்பாரே. 486

பாரடா அங்கிலியு மென்றால்மைந்தா
பாலகனே தீட்சையடா நாலாந்தீட்சை
ஆரடா இம்மூல மறியாரில்லை
யாதகாடகு மாயிரத்தெட் டொடுங்கவேணும்
வேரடா மாயையிலே மனந்தான் நாட
வீணுக வெடுத்தமூறை தவறிப்போச்சு
தேரடா தவறுமற் கவனம்வைத்துச்
சிந்தித்துப் பார்த்திடவே தெளிந்துபோச்சு. 487

போச்சடா தெளியவென்றால் லவருமல்ல
புத்திரனே இந்தமுறை செய்யவேணும்
ஆச்சடா செய்கையிலேமோகமானல்
அஷ்டகர்ம வாலையுட அருளும்போச்சு

நீச்சடா வெறும்பேச்சாற் பூசையென்று
நீணிலத்திற் செத்தவர்க ளனந்தங்கோடி
மூச்சடா மேலேறி நெஞ்சுதன்னில்
முழுங்குமடா கருவியென்றே வாயுதானே 488

தானென்ற கருவியுந்தா னுயரப்பாயுஞ்
சத்தியமாய் நீதானும் பதறிடாதே
கோனென்ற குருவருளால் மைந்தாகேளு
குருவான முப்பூவின் சுண்ணந்தன்னைந்
தேனென்று பணவிடைதான் கொண்டாயானாற்
சிவசிவா நிலைதனிலே சேர்ந்துபோகும்
நானென்ற வாயுவெல்லா மொடுங்கிப்போகும்
நமன்பாச மானதுவும் நாசமாச்சே. 489

ஆச்சடா அஷ்டகர்மம் வாலைபோலே
அருளான ஞானமூந்தான் கிடையாதப்பா
வாச்சடா கிடைத்தோர்க்கு யோகசித்தி
வழலையென்ற முப்பூவின் மார்க்கஞ்சித்தி
காச்சடா கமலரவிக ருள்ளேசோக்கும்
கலந்தெழுந்த கருவியெல்லாம்பொசுக்கிப்போகும்
பூச்சடா மேலடக்குங் கீழ்நோக்காது
பூலோகருப் பிடரியுந்தான் மூட்டினேனே. 490

மூட்டினேன் முன்பின்னும் மித்தநூலில்
மோசமாய சொல்லவில்லை மொழிதான்மைந்தா
நாட்டினேன் செந்தூரஞ் சுண்ணமாகக்
நலமான குருசோதி வழலைபோக்கும்
காட்டினேன் வெளிதிறந்த இந்தநூலின்
சுபாலியஷ்ட காமியமுட கிருபையாலே
மூடினேன் திறந்திட்டேன் வெளியாய்விண்டேன்
மூப்பணியு மிதுவாசு போதிப்பாரே. 491

பாரப்பா பஞ்சபூதி யவுடகர்மி
பாலகனே முன்குருவும் பழுதில்லாமல்
ஆரப்பா விராகத்தா ளவட்குந்தானும்
ஐயையோ முன்னேறு பிறவியானேன்
நேரப்பா வந்தவென்றுற் சிவனுமாச்சு
நிதயபிரம்ம சாரியென்று மவர்க்குப்பேரு